# முதல் இடைப் பருவத் தேர்வு - 2023

**வகுப்பு : 6** **சமூக அறிவியல்**

நேரம் : 1.00 மணி] [மதிப்பெண்கள் : 30

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.** 10x1=10

1. மனிதன் தன் காலடியைப் பதித்துள்ள ஒரே விண்பொருள்
   (அ) செவ்வாய் (ஆ) சந்திரன் (இ) புதன் (ஈ) வெள்ளி
2. பழங்கால மனிதன் தனது உணவைச் சேகரிக்க மேற்கொண்ட நடவடிக்கை
   (அ) வணிகம் (ஆ) வேட்டையாடுதல்
   (இ) ஓவியம் வரைதல் (ஈ) விலங்குகள் வளர்த்தல்
3. இந்தியா ஒரு -------- என்று அழைக்கப்படுகிறது.
   (அ) கண்டம் (ஆ) துணைக்கண்டம் (இ) தீவு (ஈ) இவற்றில் எதுவுமில்லை

**பொருந்தாததை வட்டமிடுக.**

4. தரை ஊர்தி, சுற்றுக்கலம், வானூர்தி, விண்கலம்
5. செவ்வாய்க்கோளுக்கு வளையங்கள் உண்டு.

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

6. அசோகச் சக்கரத்தில் ------- ஆரக்கால்கள் உள்ளன.

**சரியா? தவறா?**

7. பழைய கற்காலத்தைச் சேர்ந்த கருவிகள் சென்னைக்கு அருகில் உள்ள அத்திரம்பாக்கத்தில் கிடைத்துள்ளன.

**பொருத்துக**

8. எழுதப்பட்ட பதிவுகள் – மதம்
9. செந்நிறக்கோள் – செப்பேடுகள்
10. ஜொராஸ்ட்ரியம் – செவ்வாய்

**II ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி** 3x2=6

11. உட்புறக்கோள்களை பெயரிடுக.
12. எந்த விண்பொருள் தன் சுற்றுப்பாதையை பிற விண்பொருட்களுடன் பகிர்ந்து கொள்கிறது? உதாரணம்கூறுக.
13. வரலாறு என்றால் என்ன?
14. பழங்கால மனிதன் வேட்டையாடப் பயன்படுத்திய கருவிகள் சிலவற்றைக் கூறு.
15. இந்தியாவில் கொண்டாடப்படும் பல்வேறு விழாக்களில் எவையேனும் மூன்றை பற்றி எழுதுக.

**III ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** 2x5=10

16. உட்புற மற்றும் வெளிப்புறக் கோள்களை வேறுபடுத்துக.
17. பழைய கற்கால மனிதனின் வாழ்க்கை முறையைத் தற்கால வாழ்க்கை முறையோடு ஒப்பிட்டுப்பார்?
18. இந்தியா "வேற்றுமையில் ஒற்றுமை" நிலவும் நாடு என ஏன் அழைக்கப்படுகிறது?

**IV பின்வரும் இடங்களில் எவையேனும் நான்கினை இந்தியா வரைபடத்தில் குறிக்கவும்.** 1x4=4

19. 1. டெல்லி 2. கர்நாடகா 3. தமிழ்நாடு
    4. ஆந்திரப்பிரதேசம் 5. சென்னை 6. கேரளா



www.Padasalai.Net
CamScanner